# மணநாள் வாழ்த்து!

நாள்: 21-01-2024



**மணமகன்:** செல்வன் **S.B. பாஸ்கர யோகேஷ்**
**மணமகள்:** செல்வி **S.ஸ்ருதி செல்லம்மாள்**

இல்லறம் என்னும் நல்லறம் காண,
பெற்றோர் தாமும் இயைந்து நிறைந்து,
வதுவை கூட, சேலம்வாழ் சீர்மிகு,
**சிவசங்கரன் - பானுமதி** ஈன்ற மகனாம்,

**பாஸ்கர யோகேஷ்** தாமும் மகிழ்ந்தே,
மதுரை வாழும் சீர் **சுப்பிரமணியன்**
**சுப்புலஷ்மி** இணையர் ஈன்ற மங்கலச்
செல்வி **ஸ்ருதி செல்லம்மாள்** தன்னைக்

கைத்தலம் பற்றும் நந்நாள் இன்று!
கண்ணனாம் அழகன் தன்னின் அருளுடன்
நிறைந்து, மாதவள் உமையாம் மீனாட்சி,
அருளினில் திளைந்து, மதுரையம்பதியில்,



**விஜய் கிருஷ்ணா மகால்** தன்னில் நிகழும்,
திருமணம், மத்தளம் முழங்க வரிசங்கம்
நின்றோத, எத்திக்கும் நிறைந்த ஈசனாம்,
பரம்பொருள் கூட்டும் அருளால் நிறைக!

பாட்டன்மார் பாட்டிமார் ஆசியும் நிறைக!
கூட்டும் சுடரொளியாய் குவலம் போற்ற,
ஆன்ற மக்கள் செல்வம் அழகுடன் பெற்றே,
ஈன்ற தாய்க்கும் வளர்த்த தந்தைக்கும்,

மங்காப் புகழ்சேர மறுவின்றி நிறைந்து வாழ்க!
அங்கமாய் நின்ற நட்பின் அன்பினில் திளைந்து,
எங்கும்நிறை இறையருளை வேண்டி நின்று,
தங்கமாய் நிறைந்த நாளில் யானும் வாழ்த்துவேனே!



அன்பில் நிறைந்து,

**கு.ப. அசோகன்,**
(of Ottakudi), சென்னை-73
21.01-2024